Registered as a Newspaper

மாணவர்களுக்காக!
எமது நிறுவனம்
241, நாவலர் வீதியில்
(புகையிரதக் கடவைக்கு அருகில்)
New Master
INSTITUTE
Jaffna.
Monday & Saturday
திங்கள், சனி

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

வழமைபோன்று நாம்
அட் கல்லூரியில்
சகல வகுப்புக்களும்
ஒழுங்காக
நடைபெறுகின்றன
(எமது வழமையான
ஆசிரியர் குழுவினருடன்)
New Master
INSTITUTE
241, Navalar Road,
Jaffna.
Monday & Saturday

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு வைகாசி மீ 16 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வால் பிறை 1 (30.05.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி 157

அரச படையினரின் விசேட விமானம்

திடீரென தரை இறங்கிச் சேதம்!

நாவற்குழியில் நேற்று மாலை நடந்த விபத்துச் சம்பவம்

அதனைப் பாதுகாக்க இரவிரவாக பொம்மர்கள், ஹெலிகள் வான ரோந்து

— உதயன் செய்தியாளர்கள்: கே. இரத்தினராஜசிங்கம், எஸ். ஜீவரத்தினம் —

யாழ்ப்பாணம், மே 30

ஸ்ரீலங்கா அரச படையினரின் விசேட விமானம் ஒன்று நேற்று மாலை சுமார் 5 30 மணி அளவில் நாவற்குழி இராணுவ முகாம் பகுதியை அண்டிய உப்புப்பாத்தியோடு கூடிய பிட்டியில் தள்ளாடிய நிலையில் அவசர அவசரமாகத் தரையிறங்கியது. பலாலி முகாமில் இருந்து புறப்பட்டதாகக் கூறப்படும் இந்த விமானம் ஓடுபாதை வசதிகள் இல்லாத நாவற்குழி முகாம் பகுதியில் மோதித் தரை (Crash Landing) இறங்கியது.

விமானம் தரை இறங்கியபோதும் பெரிய சத்தம் ஒன்று கேட்டதாகவும்– அதைத் தொடர்ந்து 'ரயர்' எரிந்ததினால் உண்டாகும் புகையின் நாற்றம் போன்ற மணம் அப்பகுதியில் பரவியதாகவும் நாவற்குழியைச் சூழவுள்ள பகுதி மக்கள் உதயன் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இந்த விசேட விமானத்திலேயே வழக்கமாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி உட்பட வேறு பாதுகாப்புப் படை உயரதிகாரிகள் யாழ்ப்பாண பகுதிக்கு விஜயம் செய்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

விமானம் தரையிறங்கியதையடுத்து நாவற்குழி முகாம் இராணுவத்தினர் விமானத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

விமானம் தரையிறங்கிய பின்னர் அப்பகுதியில் பொம்மர் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் அடிக்கடி தாழப் பறந்து வான ரோந்து புரிந்தன

நேற்றிரவு 9-45 மணி வரை நாவற்குழி முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து வான ரோந்து நடந்து கொண்டிருந்தது.

ஹெலிக்கொப்டர்களில் இருந்து முகாமைச் சுற்றியபகுதிகளில் ரொக்கட் மோட்டார்த் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (உ-10-148)

படையினர் 100 பேர் பலி!

குடாநாட்டில் கடந்த நான்கு நாட்களாக நடந்து வரும் மோதல்களில் நூற்றுக்கும் அதிகமான படையினரை இலங்கை அரசு இழந்துவிட்டதாக பி பி சி நேற்றிரவு அறிவித்தது. (உ)

குருநகர்ப் பகுதியில் ஹெலி, படகு ரோந்து

யாழ்ப்பாணம்,மே 30

பீரங்கிப் படகுகளும், ஹெலிக்கொப்டர்களும் பாஷையூர், குருநகர் கடற்கரைப் பகுதிகளில் அடிக்கடி ரோந்து சுற்றி வருகின்றன

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்து காணப்படுகின்றனர்.

பீரங்கிப் படகுகளின் நடமாட்டத்தினால் [illegible] மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதையும் நிறுத்தியுள்ளனர்.

இதேவேளை மண்டைதீவுக் கடலில் மேலும் பல கப்பல்கள் வந்து தங்கி நிற்பதைக் காண முடிகிறது (உ-10)

நாவற்குழி முகாமை சூழவுள்ள பகுதிகளில் மக்கள் இடம் பெயர்வு!

யாழ்ப்பாணம், மே 30

அரசபடையினரின் விமானம் ஒன்று நாவற்குழி முகாமில் தரையிறங்கியதை அடுத்து முகாமைச்சூழவுள்ள அரியாலை, நாவற்குழி, செம்மணி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் அப்பகுதியைவிட்டு நேற்றிரவு அவசர அவசரமாக இடம்பெயர்ந்தவண்ணம் இருந்தனர்.

நேற்றிரவு அப்பகுதியில் பொம்மர், ஹெலிகள் தாழப்பறந்து வட்டமிட்டவண்ணம் இருந்ததால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவியது.

மேற்படி பகுதிகள் நேற்று இருளில் மூழ்கியிருந்தன. (உ-10-143)

சுபநேரம்

30-05-1987
சனிக்கிழமை

சுபநேரம்:-
8-58 முதல் 4-22 வரை
ராகுகாலம்:-
8-58 முதல் 10 32வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இலங்கைத் தமிழருக்காக
புதுச்சேரி முதல்வரும் குரல் எழுப்புகிறார்

பாண்டிச்சேரி மே, 30

யாழ் குடாநாடு மீது இலங்கை அரசு நடத்தும் விமானத் தாக்குதலை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

இப்படி புதுச்சேரி முதலமைச்சர் ஜனாப் எம். ஓ. எச். பரூக் மரைக்காயர், பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்திருக்கின்றார்.

இனக் கொலையில் இருந்து இலங்கைத் தமிழரைக் காப்பாற்றும் சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி ஜனாப் மரைக்காயர் பிரதமரைக் கேட்டுள்ளார். (இ-எ)

சஞ்சிவி இன்றுஇல்லை

குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று சஞ்சிவியை வெளியிட முடியவில்லை. உதயனையும் இரண்டு பக்கங்களிலேயே வெளியிட முடிகிறது.

சகஜ நிலைமை ஏற்பட்டவுடன் உதயன், சஞ்சீவி இரண்டும் வழமையான அமைப்பில் வெளிவரும்.

அசௌகரியங்களுக்காக வாசகர்கள் மன்னிப்பார்களாக.

— ஆசிரியர்

இலங்கைத் தமிழருக்கு தொடர்ந்து நிவாரண உதவி வழங்குவேன்

எம். ஜி. ஆர். அறிவிப்பு

புதுடில்லி, மே 30

இலங்கை அரசின் இராணுவத் தாக்குதல்களினால் துன்பப்படும் தமிழருக்குத் தொடர்ந்தும் நான் நிவாரண உதவிகளை வழங்குவேன்

இப்படி தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன் அறிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தி, உள்துறை அமைச்சர் பூட்டாசிங் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னரே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மனிதாபிமான அடிப்படையில் நல்ல நோக்கத்துடன்தான் நான் இலங்கைத் தமிழருக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கினேன். இந்த உதவியை தொண்டர் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும்.

அடிப்படை மனித உரிமைகளையே மதிக்காத நாடுகளின் உதவியுடன் அக்கிரம இராணுவத் தாக்குதல்களை நடத்திவரும் இலங்கை அரசுக்கு மனிதாபிமான உணர்வு எங்கே வரப்போகிறது!

இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி பிரதமர் ராஜீவ் காந்தி விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி ஜெயவர்த்தனா நிராகரித்து விட்டார். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இப்படி திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

முதலமைச்சர் நேற்று டெல்லியிலிருந்து சென்னை திரும்பினார் (இ-எ)

16 குடும்பங்கள் படகுமூலம் நேற்று இராமேஸ்வரத்துக்கு

சென்னை, மே 30

இலங்கை இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 தமிழ்க் குடும்பங்கள் நேற்று படகுமூலம் இராமேஸ்வரம் வந்தடைந்தன.

அச்சுவேலி வளலாய் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவர்கள்.

மொத்தம் 32 பேர்களைக் கொண்டவை இக்குடும்பங்கள்.

இவர்களுடன் கூட வந்த இன்னொரு படகுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

இலங்கையில் இராணுவத் தாக்குதல்கள் காரணமாக இலங்கையில் இருந்துவரும் தமிழ் அகதிகளைப் பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகளை உஷார் நிலையில் வைத்து இருக்கும்படி. மாநில அரச தலைமைச் செயலாளர் திரு. எஸ் பத்மநாதன் இராமநாதபுரம் மாவட்டக் கலக்டருக்கு உத்தரவிட்டிருக்கிறார். (இ-எ)

பிரபாகரனுக்கு இந்தியா வரும் எண்ணம் இல்லை

சென்னையில் அறிக்கை

சென்னை, மே 30

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பத்திரமாக இருக்கிறார்.

இந்தியா வரும் எண்ணம் அவருக்கு இல்லை

-இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் நடேசன் சென்னையில் தெரிவித்தார்

வல்வெட்டித்துறையில் கட்டடங்கள் அனைத்தும் அரசப்படைகளின் விமானத் தாக்குதலால் முற்றாக தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன.

கரையோரப் பகுதியில் வாழ்ந்து வந்த பொது மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

—இப்படி திரு. நடேசன் தெரிவித்தார் (உ-எ)

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து மோதல்

25 பொதுமக்கள் பலி!

யாழ்ப்பாணம்,மே 30

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேறி விடுதலைப் புலிகளுடன் தொடர்ச்சியான மோதல்களில் ஈடுபட்டு வந்த சிப்பாய்கள் பெரும் இழப்புகளுடன் நேற்று முகாமுக்குத் திரும்பினர்.

சுமார் 15 படையினர் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்தனர்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வடமராட்சிப் பகுதியில் நேற்று பொம்மர் மற்றும் படையினரின் தாக்குதல்களில் 25க்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டனர்

வடமராட்சியில் மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. (உ-10)

தமிழர்கள் பச்சைப் படுகொலை:

ஸ்ரீலங்கா அரசு என்னை ஏமாற்றிவிட்டது - ராஜீவ்

புதுடில்லி, மே 30

ஸ்ரீலங்கா அரசு என்னை ஏமாற்றிவிட்டது.

இராணுவத் தாக்குதலை நடத்துவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காகவே பேச்சுவார்த்தை என்று ஸ்ரீலங்கா அரசு காலத்தைக் கடத்தியது.

இதன்மூலம் ஸ்ரீலங்கா அரசு என்னை ஏமாற்றிவிட்டது –

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

கோவிலுக்கும் குண்டு போட்ட பாவத்துக்காகவாவது கடப்பிடி ஏதாவது நடக்காமலே விடும் என்டு நினைச்சனவ......!

ஆளணி, ஆயுதம் மண்டைதீவு மூலம் யாழ் கோட்டைக்கு

யாழ்ப்பாணம், மே 30

பீரங்கிப் படகுகள் மூலம் மண்டைதீவு இராணுவ முகாமுக்கு நேற்று மேலும் பல துருப்புகளும் இராணுவத் தளபாடங்களும் கொண்டுவரப்பட்டன.

மண்டைதீவுக் கடலில் தங்கிநிற்கும் பெரிய கப்பல்களில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் இறக்கப்பட்டன.

நேற்றுக்காலையில் இருந்து நண்பகல்வரை ஆயுதங்களை இறக்கும் வேலைகள் நடைபெற்றன.

மண்டைதீவுஇராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட ஆயுதங்களும் துருப்புகளும் கோட்டை இராணுவ முகாமுக்குப் பின்னர் அனுப்பிவைக்கப்பட்டதாக அறியவந்தது. (உ-10)

முழு நாளும் ஊரடங்கு

யாழ்ப்பாணம், மே 30

யாழ் குடாநாட்டில் நேற்று மீண்டும் காலை பத்து மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று முழு நாளும் அமுலில் இருக்கும்.

இப்படி யாழ்ப்பாண வானொலி அறிவித்தது (உ-10)

யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை நிறுத்த

ஜே.ஆர். பிடிவாதமாக மறுப்பு

கொழும்பு, மே 30

யாழ் குடாநாட்டின் மீதான இராணுவத் தாக்குதலை நிறுத்த முடியாது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்துவிட்டார்.

இப்படி பி பி சி. வானொலி நேற்று அறிவித்தது.

கொழும்புச் செய்தியாளர் ஜோன் றெற்றி அனுப்பிய செய்தியை ஆதாரம் காட்டி பி.பி.சி. இதனைத் தெரிவித்தது.

பிரதமர் ராஜீவ் காந்தி விடுத்த காரசாரமான அறிக்கைக்கு கொழும்பு அரச வட்டாரங்கள் மௌனம் சாதித்து வருகின்றன

ராஜீவின் கண்டனத்தில் ராணுவத் தலையீட்டுக்கான பயமுறுத்தல் தொனிப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றன.

இது குறித்து நிச்சயமான முடிவு ஒன்றை எடுக்கமுடியாத அல்லது எடுக்க விருப்பமில்லாத நிலையில் பிரதமர் காந்தி இருக்கிறார் என்று இலங்கை அரச வட்டாரங்கள் கருதுகின்றன.

எப்படி இருப்பினும், இராணுவத் தாக்குதல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

சரண் சிங் காலமானார்

புதுடில்லி, மே 30

இந்தியாவின் ஐந்தாவது பிரதமராக பணிபுரிந்த திரு சௌதரி சரண்சிங் தனது 85ஆவது வயதில் நேற்று அதிகாலை காலமானார்.

ஜனதா ஆட்சியில் இவர் சில காலம் பிரதமராக பதவி வகித்தார்.

அதற்கு முன்னர் துணைப் பிரதமர், நிதி அமைச்சர், உள்துறை அமைச்சர் பதவிகளை வகித்திருந்தார். (இ-எ)

இந்திய கடற்படை புலிகளுக்கு உதவி?

லண்டன், மே 30

பாக்கு நீரிணைப் பகுதியில் காணப்பட்ட இந்திய கடற்படைப் படகுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வருகின்றனவா?

—இப்படி சந்தேகம் எழுப்பும் தகவல் ஒன்றை பி பி ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோன் றெற்றி நேற்று இரவு லண்டனுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இது உண்மையானால், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை அரசைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கை மிகவும் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவர்ந்த இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடி மகிழ
நேர்த்தியான
ஒலிவ்
ஸ்நானப் பவுடர்
பாவியுங்கள்
1 பைக்கட்
-/50 சதம் மட்டுமே
இது ஓர்
மில்க் வைற்
தயாரிப்பு

ஒலிவ் ஸ்நானப் பவுடர் OLIVE Bathing Powder

உதயன்

30 . 05 . 1987 சனிக்கிழமை

யோகாசனமும் புனிதக் கலை அது
மனிதனைப் பூரணமாக்குவது

MILKWHITE BAR SOAP

8 மில்க்வைற் பார்சோப்மேலுறைகள் அல்லது 10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அனுப்பி யோகாசன புத்தகம், விளக்கப் படம், மற்றும் கிரிக்கர்களையும் பெற்றுக் கொள்ளலாம். -மில்க்வைற் யாழ்ப்பாணம்

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

உடனே செய்க!

“உலக நாடுகளே! இப்போதாவது உங்கள் கண்களைத் திறந்து பார்த்து ஒரு சிறுபான்மை இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்துங்கள்!” உதயனின் நேற்றைய ஆசிரியத் தலையங்கத்தின் கடைசி வரிகள் இவை. அவற்றை எழுதிய மை காய்வதற்குள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி உலக சமூகத்திடம் அதே கோரிக்கையை விடுத்தார்.

தமிழர் மீதான தாக்குதலை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதியிடம் ராஜீவ் கேட்டிருந்தார். ஜே. ஆர். நிராகரித்து விட்டார். அதனைத் தொடர்ந்து விடுத்த அறிக்கையிலேயே தமிழர்களின் அழிவைத் தடுக்க உதவுமாறு ராஜீவ் உலக நாடுகளைக் கேட்டிருக்கிறார்.

ராஜீவ் இதுவரை அறியாதிருந்த, புரியாதிருந்த பல விடயங்களை இப்போது புரிந்திருக்கிறார் என்பதை அந்த அறிக்கை புலப்படுத்துகிறது.

* ஸ்ரீலங்கா அரசு என்னை ஏமாற்றிவிட்டது.
* இராணுவத் தாக்குதலுக்குத் தயாராவதற்காகவே பேச்சுவார்த்தை என்று அது நாடகம் நடத்தியது.
* தனது சொந்தப் பிரசைகளுக்கு எதிராகவே பச்சைப் படுகொலையை ஸ்ரீலங்கா அரசு நடத்துகின்றது.
* தமிழ்ப் போராளிகளை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு தமிழர்களைப் பிணக் குவியலாக்கும் முயற்சியிலேயே ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

இத்தனை அம்சங்களையும் நாம் பல சந்தர்ப்பங்களில் இப்பகுதியில் எடுத்துரைத்திருந்தோம். இத்தனை சிக்கலிலேனும் இந்தியப் பிரதமர் இவற்றைப் புரிந்திருப்பதால் இனியாகுதல் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பார் என நம்புவோம்.

ஈழத்தமிழர்கள் சார்பில் [illegible] கொண்டிருப்பவர்கள் அதனை உலகுக்கு எடுத்துச் சொல்ல நல்ல தருணம் இது. அப்படிச் செய்வதன் மூலம் தமிழர்களுக்கு ஆதரவாக உலக அபிப்பிராயத்தைத் திரட்டலாம். அவர்களின் அழிவைத் தடுக்க [illegible] தூண்டலாம்.

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் நியாயமானது என்பதை உலக நாடுகளை அங்கீகரிக்க வைக்கலாம். தானே முதல் நாடாக நின்று ஈழத்தமிழர் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கலாம்.

ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் தாம் நிவாரணம் வழங்குவோம் எனத் தமிழக முதல்வர் அறிவித்திருக்கிறார். அந்த வழியில் இந்திய அரசும் தமிழர் போராட்டத்தை அங்கீகரித்து நீதியின் பக்கம் நின்று, தர்மம் தழைக்கத் துணை புரிய வேண்டும்.

அதுவே இந்தியாவின் முகத்தில் பூசப்பட்ட [illegible] துடைக்க ஒரே வழியாகும். இதைச் செய்வதிலும் தாமதம் [illegible] கொண்டால் ஈழத் தமிழருக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பேராபத்தாக முடியும்.

இப்போது உடன் செயற்பாடு தேவை. வெறும் அறிக்கைகள் அல்ல. பேச்சுப் பல்லக்குத் தம்பி [illegible] என்ற நிலை வேண்டாம்.

சமாதானத்தை நிலைநிறுத்தவே இராணுவ நடவடிக்கையாம

உயிர்கள் பலியாவதை தடுக்க முடியாது -- ஜே. ஆர்.

கொழும்பு, மே 30 சமாதானத்தை நிலைநாட்டவே யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் பல உயிர்கள் பலியாவதைத் தடுக்கமுடியாது.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் [illegible] அமைச்சர் [illegible] ஜனாதிபதி [illegible]. அதன் பின்னர் நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி இப்படிச் சொன்னார்.

பௌத்ததர்மம், அஹிம்சை என்பனவற்றின் வழியிலேதான் ஆட்சி நடத்தப்படுகிறது.

யாழ்குடாநாட்டில் வன்செயல்களில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

அஹிம்சை வழியில் நாம் ஆட்சி புரிந்தாலும் யாழ்ப்பாணத்தில் சமாதானத்தைக் கொண்டுவர இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர்க்கமுடியாது. இராணுவ நடவடிக்கையின்போது பல உயிர்கள் பலியாகலாம். அதையும் தடுக்க முடியாது.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

இன்றைய நிலையில் யாழ் வர்த்தகர்கள் செய்ய வேண்டியது என்ன?

வர்த்தகர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 30 இன்றைய நிலையில் யாழ் வர்த்தகர்கள் செய்ய வேண்டியது என்ன?

இது தொடர்பாக யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இனக்கொலை நடவடிக்கையில் முழுமூச்சாக இறங்கியுள்ள சிங்கள இராணுவத்துக்கு எதிராக இன்று தமிழ் மக்கள் ஜீவமரணப் போராட்டம் நடத்துகின்றனர். இந்நிலையில் வர்த்தகர்களாகிய நாம் பெரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

பொருட்களைப் பதுக்குவதாகவோ, கொள்ளை லாபம் அடிப்பதாகவோ எதுவித குற்றச்சாட்டுகளுக்கும் இடம் கொடுக்காமல் கண்ணியத்துடன் நடந்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வேண்டுகிறோம்.

ஒரு சிலர் விடும் தவறுகள் வர்த்தகர் சமூகத்துக்கே பெரும் அவப்பெயரையும், பொதுமக்களின் பெரும் வெறுப்பையும் ஏற்படுத்தும் என்பதையும் மீண்டும் குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே வர்த்தக சகோதரர்கள் அனைவரும் பொறுப்புடன் தமது சேவையைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (இ)

அத்துலத்தின் வியாக்கியானம்

கொழும்பு, மே 30 பச்சைப் படுகொலை யாழ் குடாவில் இடம்பெறவில்லை; கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் தான் இடம்பெற்றது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார் என்று பி.பி.சி. வானொலி நேற்று அறிவித்தது.

பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று விடுத்த காரசாரமான அறிக்கைக்கு பதிலளிக்கும் முகமாக அமைச்சர் திரு. அத்துலத் முதலி இப்படித் தெரிவித்தார் என்று பி.பி.சி மேலும் தெரிவித்தது. (இ-எ)

சிவில் நிர்வாகத்தை கைப்பற்றும் போர்வையில் தமிழின சங்காரம்

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், மே 30 யாழ் குடாநாட்டின் சிவில்நிர்வாகத்தை மீண்டும் கைப்பற்றுவது என்ற போர்வையில் இந்த ஸ்ரீலங்காவின் பேரினவாத அரசு யாழ் குடாநாட்டில் திட்டமிட்ட தமிழினசங்காரத்தை நிறைவேற்றுவதில் முனைந்துள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்டக் குழு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இலங்கையின் பிறபகுதிகளுடனும் உலகின் பிறநாடுகளுடனும் யாழ் பிரதேசம் துண்டிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் காட்டுமிராண்டித்தனமான முப்படைத் தாக்குதலையும் முடுக்கிவிட்டுள்ளது.

பொருளாதாரத்தடை, தொலைத்தொடர்புத் தடை, போக்குவரத்துத் தடை போன்ற அரசின் மனிதாபிமானமற்ற செய்கைகளால் நலிவுற்றிருக்கும் மக்கள் மீது மூர்க்கத்தனமான கொலைகள் மூலம் அவர்களை அடிபணிய வைத்துவிடலாமென அத்துலத்முதலி கும்பல் கனவு கண்டு கொண்டிருக்கின்றது.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அரசின் கடமை.

ஆனால் அதற்கு மாறாக அரசு தமிழ் மக்களை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளது.

பொதுசன தொடர்பு சாதனங்கள் மூலம் பொய்யான தகவல்களைக் கொடுத்து அரசு தனது கொடுஞ்செயல்களை நியாயப்படுத்த முயற்சிக்கின்றது.

அரசு எதைக் கூறினும் தமிழ்மக்கள் அவற்றை நம்பத் தயாரில்லை.

மக்களைக் கொன்று குவிப்பதை உடன் நிறுத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்குடன் நல்ல சூழ்நிலை உருவாக்க அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

114 பேர் பலி!

சீனாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 114 பேர் உயிரிழந்தனர்.

இவர்களுடன் 191 பேரைப் பலிகொண்ட காட்டுத் தீ இப்போது புதிதாக ஆறு இடங்களில் பரவி [illegible] எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

வியட்நாம் யுத்தத்தில் பலியானோர் 10 லட்சம் காணமற்போனோர் 10 லட்சம்

பல வருடங்களின் பின் புள்ளிவிவரம்

ஹனோய், மே 29 வியட்நாம் யுத்தத்தில் உயிரிழந்த பத்துலட்சம் பேரைவிட மேலும் சுமார் பத்துலட்சம் மக்கள் காணாமற் போய்விட்டனர் என்று ஹனோய் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

அமெரிக்க அரசாங்கம் நடத்திய கண்மூடித்தனமான விமானத்தாக்குதலில் இவர்கள் அனைவரும் அடையாளம் தெரியாமல் மடிந்துபோயிருக்கலாம் என்று வியட்நாம் அரசாங்கம் மேலும் தெரிவித்திருக்கின்றது.

சுமார் 30 வருடங்கள் நடந்த வியட்நாம் யுத்தத்தில் பாதுகாப்புப் படையினர் உட்பட 30 லட்சம் மக்கள்வரையில் உயிரிழந்தனர் என்று கணக்கிடப்படுகிறது.

இந்த எண்ணிக்கையில் சுமார் பத்து லட்சம் பேருக்கே கணக்குக் காட்டப்பட்டது.

ஏனைய பத்து லட்சம் பேர்பற்றி ஒன்றுமே தெரியவில்லை.

காணமற்போனவர்கள் பட்டியலில் அவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-எ)

பிரிட்டிஷ் ராஜதந்திரி கடத்தப்பட்டார்

பிரிட்டிஷ் ராஜதந்திரி ஒருவர் ஆயுததாரிகளால் நேற்று ஈரான் தலைநகரமான டெஹ்ரானில் கடத்தப்பட்டார்.

மனைவி, குழந்தையுடன் காரில் சென்று கொண்டிருந்த போது கார் வழிமறிக்கப்பட்டது.

ராஜதந்திரியான எட்வர்ட் சாப்லின் வெளியே இழுக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டார்.

மனைவியும் குழந்தையும் காரிலேயே விடப்பட்டனர்.

லிபரல் வென்றால் வெளிநாட்டவர் ஆஸியில் தாராளமாகக் குடியேறலாம்

கான்பரா, மே 29 லிபரல்கட்சி ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டார் கூடுதலாக ஆஸ்திரேலியாவில் குடியேற அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லிபரல் கட்சி இதனை [illegible] அறிவித்தது.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தல் ஜூலை 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தற்போது தொழிற்கட்சி ஆஸ்திரேலியாவில் பதவி வகித்து வருகிறது (உ-எ)

யாழ்ப்பாண . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கிக் கொள்ளப்போவது இல்லை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்துவிட்டார்.

இப்படி பி.பி.சியின் கொழும்புச் செய்தியாளர் ஜோன் ரெற்றி நேற்றுத் தெரிவித்தார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது (இ-எ)

ஸ்ரீலங்கா - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் அறிக்கையில் மிகவும் காரசாரமான வார்த்தைகள் பாவிக்கப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

தனது சொந்தப் பிரசைகளுக்கு எதிராகவே பச்சைப் படுகொலையை (Cold blooded slaughter) ஸ்ரீலங்கா அரசு நடத்துகின்றது.

மனித உரிமைகள் சம்பந்தமான சகல நெறிமுறைகளையும் மீறி ஸ்ரீலங்கா அரசு செயற்படுகிறது.

கண்மூடித்தனமாக [illegible] மக்களை இடைவிடாமல், திரும்பத்திரும்ப ஹெலிக்கொப்டர், விமானத் தாக்குதல்களால் படுகொலை செய்வதில் சிறீலங்கா அரசு ஈடுபடுவதுடன், அப்படிச் செய்வதை ஏற்றுக்கொண்டு அதை நியாயப்படுத்துவதிலும் ஈடுபடுகிறது.

இப்படி நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

தனது நாட்டின் ஒற்றுமை, சுதந்திரம், இறைமையைப் [illegible] சிறீலங்கா அரசு இப்படிச் செயல்படுகிறது.

பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சித்த [illegible] லங்கா அரசு [illegible] திக்கொண்டது.

இதுவரை நடைபெற்ற தாக்குதல்களை இந்தியா பொறுமையுடனும் வேதனையுடனும் சகித்துக்கொண்டு பேச்சுக்களுக்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தது.

தமிழ்ப் போராளிகளை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, தமிழர்களைப் பிணக்குவியலாக்கும் முயற்சியிலேயே சிறீலங்கா அரசு இப்போது ஈடுபட்டுள்ளது.

சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ்ப் போராளிகளின் போர்க்குணம் தீவிரமடையும். சிறீலங்கா அரசுக்கும் தமிழருக்கும் இடையேயான இடைவெளி அதிகரிக்கும்.

ஓர் இனத்தை அடிப்படுத்தி அழித்தால் தீவிரவாதம் இன்னும் அதிகரிக்கும்.

நிதானத்துடன் செயல்படும்படி உலக நாடுகள் சிறீலங்காவுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

தனது இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்த சிறீலங்கா அரசுக்கு இதுவே உகந்த தருணம்.

பின்னர் தவிர்ப்பது என்பது காலம் கடந்ததாகிவிடும்.

[illegible] தெரிவித்திருக்கிறார். (இ-எ)

செய்திச் சாரம்

ஊரடங்கு நீக்கப்பட்ட நேரத்திலும் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், மே 30 ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்ட வேளையிலும் கூட நேற்று கொழும்புத்துறைப் பகுதியில் ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை ஏழு மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

காலை ஆறு மணிமுதல் பத்துமணிவரை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

● தமிழ் அகதிகள் உண்ணாவிரதம்

திருச்சி, மே 30 யாழ் குடாநாடு மீது நடத்தப்படும் விமானத் தாக்குதலைக் கண்டித்தும் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியும் இலங்கைத் தமிழ் அகதிகள் சுமார் ஐநூறு பேர் வரை நேற்று திருச்சி, கொட்டப்பட்டு முகாமில் உண்ணாவிரதம் இருந்தனர்.

அதே நேரத்தில் [illegible] 3 பெண்கள் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தனர். (இ-எ)

ரபுக்கா இராணுவத் தளபதி

சுவா, மே 29 கேர்ணல் ரபுக்கா பிஜியின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இராணுவப் புரட்சியை நடத்தினவர் இவர் என்பது தெரிந்ததே. (உ-எ)

ஈதுல் பித்ர்

யாழ்ப்பாணம், மே 30 ரம்ழான் பண்டிகை முடிவில் நேற்று ஈதுல் பித்ர் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

பதற்றத்தின் மத்தியிலும் யாழ்ப்பாணம் வாழ் முஸ்லிம் பெருமக்களும் ஈதுல் பித்ர் பெருநாளை பக்திபூர்வமாகக் கொண்டாடினர். (இ-எ)

கலைஞர் கோபம்

சென்னை, மே 30 திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி வரவுள்ள தமது பிறந்த தினத்தை வழக்கமாகக் கொண்டாடுவது போலக் கொண்டாடப்போவதில்லை என அறிவித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்திய அரசு தவறிவிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இந்த நடவடிக்கை என அவர் அறிவித்திருக்கிறார். (உ)

ஹரியானாவில் 1,336 பேர் போட்டி

சண்டிகார், மே 29 ஹரியானா மாநிலசட்ட சபையின் 90 ஆசனங்களுக்கு 1,336 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

தேர்தல் அடுத்தமாதம் 17ஆம் திகதி நடைபெறும். (இ-எ)

எரிபொருள் தொலைத்தொடர்பு தடை நீங்கும்

இராணுவ அதிகாரி அறிவிப்பு

கான்பெரா, மே 30 யாழ்குடா நாட்டை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டோம்.

அதனால் யாழ்ப்பாணம் மீதான எரிபொருள் மற்றும் தொலைத்தொடர்பு தடைகள் விரைவில் நீக்கப்படும்.

இலங்கை இராணுவத்தின் உயரதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

யு.என்.ஐ செய்தி சேவை மேற்கோள் காட்டி ஆஸ்திரேலிய வானொலி இன்று காலை 12-30மணிக்கு இச்செய்தியை வெளியிட்டது. (உ)

வடமராட்சியை பிடிப்பது பற்றி அத்துலத்முதலி

வடமராட்சியைப் பிடிக்க இன்னும் மூன்று நாள் ஆகும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுத் தெரிவித்தார்.

வடமராட்சி பாதுகாப்புப் படையினர் வசமாகும் தறுவாயில் உள்ளது என்றும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார். (இ-எ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

நீத்தார் பட்டியல்

சரசம்மா அருளானந்தசிவம்

கரம்பனைச் சேர்ந்த சரசம்மா அருளானந்தசிவம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு தம்பு திருமதி முத்து ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற பண்டிதர் அருளானந்தசிவத்தின் அன்பு மனைவியும் சாந்தி, ஆனந்தி (உதவி வைத்தியர்- திருகோணமலை), பவந்தி, அனுரதி, ஆரணன் (மேற்கு ஜேர்மனி), சுபசி, தயாபரி, நிரந்தரி, மாதவன், குருபரன், [illegible] ஆகியோரின் அன்புத் தாயாரும், குறிஞ்சி வேந்தன் ([illegible]- காந்தி ஸ்ரோர்ஸ் கொழும்பு), முரளி மனோகரன் (உதவி வைத்தியர்- திருகோணமலை), தர்மவேலாயுதம் ([illegible] பார்மஸி- திருகோணமலை) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கொட்டாஞ்சேனை 16 ஆம் ஒழுங்கை 103 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மாதம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்: T.யோகராசா.

(007)

முருகேசு பாலசுந்தரம்

(இளைப்பாறிய இலங்கை வங்கிக் காசாளர்)

இளைப்பாறிய இலங்கை வங்கி (காசாளர்) முருகேசு பாலசுந்தரம் 29-5-87 இல் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு திருமதி சிவக்கொழுந்தின் சிரேஷ்ட புதல்வனும் பரிமளகாந்தியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன், கணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ராஜேஸ்வரியின் அன்பு மாமனாரும், திரு வேலும்மயில், காலஞ்சென்ற திருமதி ஐயாத்துரை, திருமதி பரமேஸ்வரன், திருமதி சிவப்பிரகாசம் (நவக்கிரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொ. [illegible], இ. நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 30-5-87 சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியை நடைபெற்று அளவெட்டி தெற்கு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்: திருமதி பரிமளகாந்தி,
பிள்ளைகள்

[illegible] ஒழுங்கை,
அளவெட்டி தெற்கு.

(008)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 30-05-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd, at 292/2, Navalar Road, Jaffna on Saturday May 30, 1987 Registered as a Newspaper at the Genera Post Office under number QJ/94/N/87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org